[1995 மார்ச் 20

65—

எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு கட்டிடம் கட்டுதல்

*37383—**திரு. பி. சொக்கலிங்கம் :**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகத்திலுள்ள எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பணிமனை கட்டுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்தார்கள். அதற்காக தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எப்போது அந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த ஆண்டே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியின் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு

1995 மார்ச் 20]

என்னுடைய தொகுதியின் சார்பிலே, என்னுடைய தொகுதியான உத்திரமேரூரிலே பணிமனை கட்ட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, கடந்த ஆண்டு நலத் திட்ட உதவிகளை நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துவக்கிய நேரத்தில் அதற்கு அங்கே அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றுவிட்டது. அந்தப் பணிமனையைத் துரிதமாகக் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் இருக்கிறது. அதற்குப் பிறகு முடிவு பின்னால் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *66*, திரு. மு. வெங்கடராம ரெட்டி, இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

66—

தேன்கனிக்கோட்டை வட்டத்தில் மின் அழுத்தத்தை சீர் செய்தல்

**11906*—திரு. மு. வெங்கடராம ரெட்டி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை ஊரகப் பகுதிகளில் உள்ள குறைந்த மின் அழுத்ததை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேன்கனிக்கோட்டையைச் சார்ந்த கிராமங்களில் மின் அழுத்த மேம்பாட்டிற்கான பணிகள் ஏற்கனவே *1992*ஆம் ஆண்டில் இரண்டாவது காலாண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டன. தற்போது இப் பகுதியில் மின் அழுத்தம் சீராக உள்ளது.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டமானது நமது மாநிலத்தினுடைய